C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 17

OCTOBER 2025

ஆகாரம் : 10

## விசுவாசம், நம்பிக்கை, அன்பு

இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் பெரியது

**அன்பே**

1 கொரி 13:13

## Faith, Hope, and Love

these three; but the greatest of these is

**Love**

1 Corinthians 13:13



# UPCOMING EVENTS

All Sun Oct '25
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Sunday

All Tue Oct '25
7:30 pm
**COTTAGE PRAYER**
Church Members Home
Tuesday

04 Oct '25
10.20 am
**MONTHLY FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain
Saturday

All Wed Oct '25
7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain
Wednesday

11 25 Oct '25
7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain
Saturday

04 18 Oct '25
7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain
Saturday

25 Oct '25
9:30 pm
**BIBLE QUIZ-LUKE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Saturday

31 Oct '25
11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain
Tuesday

All Sat Oct '25
6:30 pm
**CHILDREN BIBLE SCHOOL**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Saturday

All Tue & Fri
5pm (Tue) & 7:30pm (Fri)
**TAMIL CLASS**
Parsonage - C.S.I. Tamil Parish Alain
Tue & Fri

# From the Pastor's Desk



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.**

அக்டோபர் 2ஆம் தேதி அகில உலக அகிம்சை தினம் ஆகும். அகிம்சை வழியிலே தான் கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது என்ற முழக்கமிட்டு இந்தியாவிற்கு விடுதலையை பெற்றுத் தந்தவர் தேசத் தந்தையான மகாத்மா காந்தியடிகள் ஆவார். அவர்களின் பிறந்த தினம் அக்டோபர் 2ஆம் தேதி ஆகும். காந்தியடிகளுக்கு அகிம்சை வழியை வித்திட்டதே 1908ஆம் ஆண்டு ரஷ்ய எழுத்தாளரான லியோ டால்ஸ்டாய் அவர்கள் எழுதின **A LETTER TO A HINDU** கடிதமே ஆகும். அக்கடிதத்தின் சாரம் "அன்பு செய் மனமே" என்பதாகும். இதனை ஆழ்ந்து சிந்தித்த காந்தியடிகள் அகிம்சை வழியைக் கையாண்டு, இந்தியாவிற்கு விடுதலையை பெற்றுத் தந்தார்.

## சத்துருக்களை சிநேகியுங்கள்:

ஆண்டவர் இயேசு மிகச்சிறந்த செய்தியை தனது மலைப்பிரசங்கத்திலே எடுத்து உரைக்கிறார். அதில் உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் என்று குறிப்பிடுகிறார். உங்களிடம் அன்பு செய்வோரை சிநேகிப்பது பெரிதல்ல, அதனிலும் மேலானது உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் என்று சிறந்த பாடத்தை கற்றுத் தருகிறார்.

## நன்மை செய்யுங்கள்:

நன்மை செய்வது என்பது உங்கள் நண்பர்களுக்கு நீங்கள் செய்வது அல்ல, மாறாக உங்களை பகைக்கிறவர்களுக்கும் நன்மை செய்யுங்கள் என்கிற புதிய அறைக்கூவலை நம் முன் வைக்கிறார், இதுவே மெய்யான அன்பின் வெளிப்பாடு.

## ஜெபம் பண்ணுங்கள்:

உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்கிற புதிய அழைப்பை நமக்குத் தருகிறார். (மத்தேயு 5:44) உண்மையான அன்பின் வெளிப்பாட்டின் ஜெபம் நிந்திக்கிறவர்களுக்காக, பகைக்கிறவர்களுக்காக செய்வதே ஆகும். இதனை தமது மலைப் பிரசங்கத்தில் போதித்த ஆண்டவர் இயேசு, கொல்கொதா மலையில் சிலுவையிலே அதை சாதித்தும் நமக்கு காண்பித்து இருக்கிறார். அன்பைக் குறித்து தூய பவுல் அடிகளார் 1கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் மிகத் தெளிவாக எழுதுகின்றார். அதில் 13—ஆம் வசனத்தில் இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது என்று மிகத் திட்டமாய் தெளிவுபடுத்துகின்றார்.

நிறைவாக,

அன்பிற்கினியவர்களே அகிம்சை வழி என்பது மெய்யான அன்பின் வழியாகும். அவ்வழியே பயணிக்கும் போது சத்துருக்களை சிநேகித்து, பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்து, நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துருவலா—க்காகவும் ஜெபித்து ஆண்டவர் இயேசுவுக்கு சாட்சியாக வாழ்வோம், கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan



# வாழ்த்தினவர்
# எலிசபெத்து

**(லூக்கா 1-45)**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

அன்பிற்கினியவர்களே, நாம் எலிசபெத்து சகரியாவைப் பற்றி சிந்திக்கின்றபோது, "கர்த்தரிடத்தில் அனைத்து கற்பனைகளின் படியேயும், நியாயமங்களின்படியேயும் குற்றம் அற்றவர்களாக நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக இருந்தார்கள்" (லூக்கா 1:6).

சகரியா எலிசபெத்து இருவரும் வயது சென்றவர்களாக இருந்தார்கள், குழந்தைப்பேறு இல்லாமல் இருந்தார்கள். குறிப்பாக பெண்களுக்கான மாதவிடாய் எலிசபெத்திற்கு நின்று போயிருந்தது. ஆனால் இருவரும் அன்பாகவும், கடவுளுக்கு முதலிடம் கொடுக்கும் தம்பதியராகவும் இருந்தார்கள்.

ஒரு நாள் கர்த்தருடைய தூதன் சகரியாவை நோக்கி உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உனக்கு ஒரு குமாரன் பிறப்பார் என்றும், அவருக்கு யோவான் என்று பேரிடுவாய் என்றும் கூறினார். இதை சகரியா நம்பவில்லை, அதனால் அவர் வாய் பேச முடியாதவராக (ஊமையாக) தண்டிக்கப்பட்டார். இதனை எலிசபக்தியிடம் சகரியா எழுதிக் காட்டின போது எலிசபெத் நம்பினார்.

கர்த்தர் என் நிந்தையை நீக்கி,என்மேல் கிருபை வைத்தார் என்று மகிழ்ந்தார் (லூக்கா 1:24). தம் மக்களோடு இந்த மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்து கொண்டாள்.வெகு நாட்களாக கர்த்தரிடத்தில் அவர்கள் விண்ணப்பம் வைத்திருக்கலாம், கர்த்தர் தாமதிப்பதின் நோக்கம் யாருக்கும் தெரியாது.கர்த்தருக்கே வழியை ஆயத்தம் செய்யப் போகிற ஆண்டவர் இயேசு பிறப்பார் என்று சகரியா—எலிசபெத்துக்கு தெரியாது. எனவே அதினதின் காலத்தில் கர்த்தர் தாமே நேர்த்தியாக செய்வார்.

சக்தியினை சந்தித்த காபிரியேல் தூதர் மரியாளையும் சந்திக்கிறார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து மரியாளுக்கு தெரிவிக்கிறார் இது நமக்கு தெரிந்த நிகழ்வு. அப்போது மரியாள் தூதன் கூறிய செய்தியை தன்னை சுற்றியுள்ள யாருக்கும் அறிவிக்கவில்லை, மாறாக மலை நாட்டிற்கு எலிசபெத் வீட்டிற்கு உடனே செல்லுகிறார்.மரியாள் எலிசபத்தை வாழ்த்துகிறாள், அப்போது எலிசபெத்தின் வயிற்றில் உள்ள குழந்தை பெரும் மகிழ்வாள் துள்ளித்து (லூக்கா 1:44).எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, மரியாளை வாழ்த்துகிறார்." ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது" எனக் கூறி ஆண்டவரின் தாயார் என முதல் அறிமுகத்தை மரியாளுக்கு எலிசபெத்து தருகிறார்.

### எலிசபெத்தின் நற்குணங்கள்:

எலிசபெத்து வயது முதிர்ந்தவர்கள் இருந்தாலும் எனக்கு குழந்தை இல்லை என ஆண்டவரைக் குறை கூறவில்லை. குழந்தை இல்லை என சகரியா வேறு திருமணமும் செய்யவில்லை காரணம் எலிசபெத்து மீது காட்டிய அன்பு.

கர்த்தரின் வார்த்தையை எலிசபெத்து நம்பினார்.வயது சென்றாலும் குழந்தை பிறக்கும் என்று, அது அப்படியே நடந்தது.

தேவனுக்கு முன்பாக சகரியாகவும் எலிசபெத்தும் நீதி உள்ளவர்களாக இருந்தார்கள். கர்த்தரின் கற்பனைகளையும், நியமங்களின் படியேயும் குற்றம் அற்றவர்களாக நடந்து கொண்டார்கள், அவர்கள் நற்சாட்சி உள்ள வாழ்க்கை வாழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வயதில் சிறியவராக இருந்த மரியாளின் வாழ்த்துதலுக்குச் செவிசாய்த்து, மரியாளைப் புகழ்ந்து எலிசபெத்து கூறுகிறாள். புகழ்ந்து கூறுவதற்கும் நல்ல மனம் வேண்டும், அந்த மனம் எலிசபெத்திடம் காண முடிகிறது. கர்த்தரின் தாயார் மரியாள் என்று முதலில் கூறின எலிசபெத்து, மூன்று மாதம் மரியாளுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாக்கிறாள்.

என் ஆண்டவரின் தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு கிடைத்த பாக்கியம் எனத் தன்னை முழுவதும் தாழ்த்துகிறாள், மரியாளை வாழ்த்துகிறாள். ஏற்ற காலத்தில் கர்த்தர் எல்லாவற்றையும் நேர்த்தியாக செய்பவர் என்று எலிசபெத்து விசுவாசித்தாள் அது நன்மையாகவே நடந்தது. நாமும் கூட எலிசபெத்தின் நற்குணங்களை பின்பற்றுவோம், கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா



*Mrs . P . Velanganni*



# செயலர் மடல்

(CHAMP FOR C

கிறிஸ்துவுக்கு பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த 9 மாதங்கள் நம்மை பாதுகாத்து வழி நடத்தி வந்த மட்டில்லா கிருபைக்காக நன்றி ஏறெடுத்துக் கொள்வோம். கடந்த வாரம் சிறப்பாக சாம்பியன்ஸ் பார்க் கிரைஸ்ட் நிகழ்வுகள் மிகவும் நேர்த்தியாக நடைபெற்று முடிந்தது, நம் திருச்சபையின் பிள்ளைகள் கடவுள் தந்த எண்ணற்ற திறமைகளை கர்த்தருடைய நாமம் மகிமைக்கு என்று பயன்படுத்தி கர்த்தர் நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். தேவனுக்கே புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாவதாக. அதேபோல் நம் திருச்சபையில் ஆயர் மூலமாக, மற்றும் இல்ல சந்திப்புகள் நன்றாக முடிந்தது, அறுப்பின் ஸ்தோத்திரம் பண்டிகைக்கு ஆயத்தமாக, அதற்காக ஜெபிக்கவும்.மற்றும், ஒவ்வொரு குடும்பத்தினரும் தயங்களால் இயன்றதை குடும்பத்திற்கு ஒரு ஏலப்பொருள் வீதமாக கொடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம், உங்களை ஆசீர்வதிப்பாராக.

விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. 1கொரி 13:13.

மனித வாழ்க்கையின் அடித்தளங்கள் விசுவாசம், நம்பிக்கை, அன்பு.

**விசுவாசம்:** நம்மை தேவனோடு இணைக்கிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் (எபிரெயர் 11:6). காணாததை நம்பி நடக்கும் மனம் தான் உண்மையான விசுவாசம்.

**நம்பிக்கை:** இருளின் நடுவிலும் வெளிச்சத்தை காட்டுகிறது. "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள் ரோமர் 12:12. நம்பிக்கை மனிதனை முன்னேற்றம் நோக்கி நடத்தும் ஆற்றல்.

**அன்பு:** அனைத்தையும் பூரணமாக்குகிறது. அன்பி—ல்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவேஇருக்கிறார். (1 யோவான் 4:8). அன்பு தான் தேவனின் இயல்பு, அன்பு தான் மனிதனை உண்மையில் மாற்றும் சக்தி. அதனால் பவுல் தெளிவாகக் கூறுகிறார்: "இவைகளில்அன்பே பெரியது." அன்பில்லாத விசுவாசமும், நம்பிக்கையும் வெறும் வெற்றுச் சப்தம் மட்டுமே.

வாழ்வில் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் காத்துக்கொள்ளுங்கள். ஆனால் அனைத்திற்கும் மேலாக அன்பை வெளிப்படுத்துங்கள்; ஏனெனில் அன்பே நிலையானது. தேவன் அன்பாகவே இருக்கிறார்.

**இறைப் பணியில்**

MR. SANTHOSH KUMAR

திருச்சபைச் செயலர்

## மன்னா செப்டம்பர்-25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசு-வுக்கே மகிமை. செப்டம்பர் மாத மன்னாவை குறித்த ஒரு பார்வை. பக்கம் 3-ல் லேயாளின் "பொறுமை" நம் வாழ்வுக்கு தேவை என்றும்,பக்கம் 4-ல் செயலர் மடலில் திருச்சபை நிகழ்வுகளுடன் நாம் ஒரு மனத்துடன் இறைபணியை எழுந்து கட்டுவோம் என்றும்,பக்கம் 7-ல் கிறிஸ்தவரின் மெய்யான அன்பு குடும்பம், திருச்சபை, உலகம் இந்த மூன்று நிலைகளில் தெளிவுற வெளிப்பட வேண்டும் என்றும், பக்கம் 9-ல் கடவுள் மீது நாம் வைக்கும் நம்பிக்கையால் அனைத்து பயங்களையும் வெல்ல முடியும் என்றும், பக்கம் 11-இல் ஒவ்வொருவர் உள்ளத்துள்ளும் ஆண்டவர் இயேசுவுக்கு இடம் அளிக்கும் போது மகிமையின் மேல் மகிமை அடைவோம் என்றும், பக்கம் 13-இல் இயேசுவின் சீடரான மத்தேயுவின் இரத்த சாட்சியான வாழ்வு நமக்கான அறைகூவல் என்றும், திருமறை வினா விடை எழுதி இருப்போர், சிறுப் பிள்ளைகளின் புதிர்கள், புதிர்களுக்கு பதில் எழுதியுள்ள சிறுபிள்ளைகள் மற்றும் ARTICLE எழுதியுள்ளோர் அனைவருக்கும் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் தெரிவிக்கிறோம். ஆண்டவர் இயேசு தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

**இறைப்பணியில்,**

**ஆயர்.**



# Rise and Shine
## எழும்பி பிரகாசி

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

அன்பானவர்களே நாம் வாழ்கின்ற இந்த நாட்களை பார்க்கின்ற போது இயேசு கிறிஸ்துவின் வருகை அதி சீக்கிரமாய் வரபோகிறது. ஏன் என்றால் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற தீர்கதரிசனங்கள் அனைத்தும் நம் கண்முன்னே நிறைவேறி கொண்டிருக்கிறது. சகரியா 12-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் காலம் வந்திருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசன வசனங்களைவாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம்சமீபமாயிருக்கிறது. என்று வெளிப்படுத்தினத விசேஷம் 1:3. இல் பார்க்கிறோம். கடைசி காலத்தில் எல்லா நாடுகளிலும் எழுப்புதல் உண்டாகவும், எல்லா ஜனங்களளுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும் தேவன் அனேக ஊழியர்களை பயன்படுத்தி வருகிறார். அமெரிக்க தேசத்தில் 32 வயதான **Charlie Kirk** என்ற இளைஞர் வாலிபர்கள் மத்தியில் எழும்பி பாவத்தை குறித்தும், மனம்திரும்புதலையும் குறித்தும் கண்டித்து உணர்த்தியதின் நிமித்தம் துப்பாக்கியால் சுடப்பட்டு இயேசு கிறிஸ்துவிற்காக இரத்த சாட்சியாக நம் காலத்தில் மரித்து இருக்கிறார். அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள், என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். என்று மத்தேயு 24:9 இல் பார்கிறோம்.

பிரியமானவர்களே இந்த நாட்களில் நாம் ஆண்டவருக்காக என்ன செய்கிறோம். நாம் அவருக்காக எழும்பி பிரகாசிக்க தேவன் விரும்புகிறார் ஆயத்தமாகுவோம், ஆயத்தப்படுத்து வோம். இயேசு சீக்கிரம் வருகிறார். ஆமேன்.

"சிந்திப்பீர், சிந்திப்பீர் காலங்களை சிந்திப்பீர் இயேசு கிறிஸ்துவின் வேலை ஒன்றே பிரதானம்"




Article by

**MR. RAJESH ANBU**

Women's Fellowship



# இயேசுவின் வம்சத்தில் இடம்பெற்ற நான்கு பெண்கள்

## FOUR WOMEN IN JESUS' FAMILY TREE

மத்தேயு 1:1. ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு:

யூதர்கள் பொதுவாக அவர்களுடைய வம்சத்தில் ஆண்களின் பெயர்களை மாத்திரம் போடுவது தான் வழக்கம். ஆனால் இயேசுவின் வம்ச வரலாற்றில் நான்கு பெண்களின் பெயர்கள் இடம்பெற்றிருப்பதை பார்க்கும்போது, இயேசு பெண்களின் அடிமைத்தனத்தை நீக்குமாறும், சமுதாயத்தில் பெண்கள் மீது இருக்கும் கண்ணோக்கத்தை மேலோங்கச்செய்வதின் நோக்கமாகவும் கூட இருக்கலாம். குறிப்பாக, இந்த நான்கு பெண்களின் சரித்திரம் பாவம் நிறைந்ததாக இருந்தது. இவற்றிலிருந்து நாம் அறிந்துகொள்வது இயேசு பாவிகளை இரட்சிக்க இந்த உலகத்தில் வந்தார் என்பதாக.

### முதல் பெண்மணியின் பெயர் தாமார்

தாமார் வேசித்தன வேடம் போட்டதினால் யூதாவின் மூலமாக பிள்ளை பெற்றெடுத்தாள். அதில் வந்த மகன் பெயர் பாரேஸ் (ஆதி 38:12–29). பாரேஸ் இயேசுவின் தாயாகிய மரியாளின் முன்னோராக இருந்தான். இந்த சம்பவம் நடக்கும்போது இயேசு பரலோகத்தில் இருந்தார்; இதை பார்த்த பிறகு அவர் இந்த பாவமுள்ள சந்ததியில் பிறக்க சித்தங்கொண்டார்.


### முதல் பெண்மணியின் பெயர் தாமார்

தாமார் வேசித்தன வேடம் போட்டதினால் யூதாவின் மூலமாக பிள்ளை பெற்றெடுத்தாள். அதில் வந்த மகன் பெயர் பாரேஸ் (ஆதி 38:12–29). பாரேஸ் இயேசுவின் தாயாகிய மரியாளின் முன்னோராக இருந்தான். இந்த சம்பவம் நடக்கும்போது இயேசு பரலோகத்தில் இருந்தார்; இதை பார்த்த பிறகு அவர் இந்த பாவமுள்ள சந்ததியில் பிறக்க சித்தங்கொண்டார்.


**இரண்டாவது பெண்மணியின் பெயர் ராகாப்** இவள் எல்லாருக்கும் தெரிந்த பெயர் பெற்ற விபச்சாரியாக எரிகோ பட்டணத்தில் இருந்தாள் (யோசு 2:1). யூத குலத்தை சேர்ந்த சால்மன் என்பவன் இவளை திருமணம் செய்துகொண்டான். இவள் இயேசுவின் தாயாகிய மரியாளின் முன்னோராக இருந்தாள். இந்த விபச்சார சந்ததியில் பிறக்குமாறு இயேசு பரலோகத்தில் இதை பார்த்துக்கொண்டிருக்கும் போதே தீர்மானம் பண்ணினார்.

**மூன்றாவது பெண்மணி ரூத்** இவள் ஒரு மோவாபிய வம்சத்தை சேர்ந்தவள். முன்னோர்கள் மோவாபியர். லோத்தின் மூலமாக முறைகேடாக

வந்த சந்ததிதான் இந்த மோவாப் (ஆதி 19 : 30 – 37 ). இவள் இயேசுவின் தாயாகிய மரியாளின் முன்னோராக இருந்தாள். இந்த சம்பவமும் நடைபெறுவதை இயேசு பரலோகத்திலிருந்து பார்த்து, இப்படிப்பட்ட வேசித்தன சந்ததியில் பிறக்க சித்தங்கொண்டார்.

## நான்காவது பெண்மணி பத்சேபாள்

இவள் உரியாவின் மனைவி. தாவீதின் மூலமாக தவறான பழக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவள். இவள் இயேசுவின் தகப்பனாகிய யோசேப்பின் முன்னோர் ஆவாள்

ஏன் இயேசு இந்த உலகத்தில் பிறக்கும்போது அவர் பாவம் நிறைந்த குடும்ப வரிசையில் பிறக்கவேண்டும். காரணம் அவர் பாவிகளை இரட்சிக்க இந்த உலகத்தில் வந்தார் என்பதை விளக்குவதற்காக தான். நாம் பாவி என்று புறக்கணிக்காதவர் இயேசு. பாவிகளின் சிநேகிதன் என்று அழைக்கப்பட்டவர். அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான் (மத் 1 : 21). கர்த்தருடைய கிருபை உங்களோடுகூட இருப்பதாக. ஆமென்.

Article by

**MRS. HEMALATHA STEPHEN**

Women's Fellowship

## EZRA 1-10
## எஸ்றா 1-10

1. ராஜா,எருசலேம் ஆலய பொருட்களை யார் கையினால் எடுக்க வைத்தான்?
2. பூர்வீகம் இல்லாததால்,ஆசாரியப் பணியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் யார்?
3. ஆலய அஸ்திபாரம் போட்டவர்கள் யார்?
4. பட்டணம் கட்டப்பட்டால்,ஜனங்கள் எவைகளை கொடுக்க மாட்டார்கள்?
5. இஸ்ரவேல் ராஜாவால் கட்டப்பட்ட ஆலயத்தை நிர்மூலம் ஆக்கினது யார்?
6. புதிய ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட காலம் எது?
7. உத்தம வேதபாரகன் யார்?
8. தலைவனாகிய இத்தோ இருந்த இடம் எது?
9. எந்த இராஜாக்களின் சமூகத்தில் இஸ்ரவேலருக்கு தயவு கிடைத்தது?
10. மறுஜாதி ஸ்திரீயை விவாகம் பண்ணின பாடகன் யார்?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

## செப்டம்பர்-2025 மாத வினாவிற்கான விடைகள்

1. *2நாளா 25:27,28*
2. *2நாளா 26:10*
3. *2நாளா 27:5*
4. *2நாளா 28:19*
5. *2நாளா 29:34*
6. *2நாளா 30:18,19*
7. *2நாளா 31:14*
8. *2நாளா 32:30*
9. *2நாளா 33:23,24*
10. *2நாளா 34:22*
11. *2நாளா 35:25*
12. *2நாளா 36:22,23*

### செப்டம்பர்-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

**திருமதி. ஜெனிபர் பால்,**

**திருமதி. பிப்ளின் நெல்சன்,**

**திருமதி. ஹேமலதா ஸ்டீபன்,**

**திருமதி. ரோஸ்மேரி,**

**திருமதி. ஜோனிஸ் ஹெர்சல்,**

**திருமதி. ராதிகா செல்வக்குமார்,**

**திருமதி. ரேனா ஜோஸ்**

# சிறப்பானவள்(ன்)



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

"இன்றைய உலகில் ஒப்பிடுதல், போட்டி, விமர்சனம் ஆகியவை மிகவும் சாதாரணமாகி விட்டதால், இளைஞர்கள் தகுதியற்றவர்களாகவோ, கவனிக்கப்ப—டாதவர்களாகவோ உணர்வது எளிது". ஆனால், வேதாகமம் நமக்குக் கூறுவதோ, நீங்கள் சிறப்பானவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் ஒரு நோக்கத்திற்காக படைக்கப்பட்டவர்கள்.

நாம் ஏன் சிறப்பானவர்கள்?

1.ஆதியாகமம் 1:27 — கர்த்தர் தமது சாயலாக மனிதனைப் படைத்தார், அவனை இறைச் சாயலாகவே படைத்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். அப்படியென்றால், நம்முடைய மதிப்பு மற்றவர்கள் நம்மை எப்படி பார்க்கிறார்கள் என்பதை பொறுத்தல்ல, மாறாக ஆண்டவர் நம்மை எப்படி உருவாக்கினார் (அவரது சாயலில்) என்பதைப் பொறுத்ததே!

2.சங்கீதம் 139:14 — நான் பிரமிக்கத்தக்கு அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள். அது என் ஆத்துமாவுக்கு நன்றாய் தெரியும். அப்படி என்றால் நாம் ஒரு சாதாரண, தற்செயலாக உருவாக்கப்பட்ட நபர் அல்ல". நம்முடைய தோற்றம்,குணம், திறமைகள், ஆளுமை, வரங்கள் அனைத்தும் மாஸ்டர் வடிவமைப்பாளராம் கர்த்தரால் சிறப்பாக,தனித்துவமாக உருவாக்கப்பட்டவை.

3. எரேமியா 31:3 — அநாதி சிநேகிதத்தால் உன்னைச் சிநேகித்தேன். ஆதலால், காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன். எனவே, நாம் மிகவும் ஆழமாக ஆண்டவரால் நேசிக்கப்பட்டவர்கள். அவருடைய அன்பு உண்மையுள்ளது, நிபந்தனை களற்றது, நித்தியமானது. நாம் தவறிழைத்தாலும் கர்த்தர் நம்மை நேசிப்பதை மட்டும் நிறுத்துவதே இல்லை.

வேதாகமத்தில் சிறப்பானவர்கள்:

மரியாள்: கிருபை பெற்றவளே, வாழ்க. கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். லுக்கா1:28.

தாவீது: கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனை தமக்குத் தேடி, அவனை கர்த்தர் தம்முடைய ஜனங்களின் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார். 1சாமுவேல் 13:14.

மோசே: நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோன் இடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்.யாத்திராகமம் 3:10.

எஸ்தர்: நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாய் இருக்கும்படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே. எஸ்தர் 4:14.

இவ்வாறு வேதாகமத்தில் கர்த்தரால் சிறப்பாக அழைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பலர் இருந்தாலும் அவர்கள் அனைவரும் சாதாரண மனிதர்களாக இருந்தவர்களே. ஆகையால் நாமும் கர்த்தருடைய பார்வையில் சிறப்பானவர்களே. இளைஞரே, நீ சிறப்பானவள்/சிறப்பானவன். கர்த்தர் தாமே நம்மை நேசிக்கிறார், உயர்த்த விரும்புகிறார். உலகம் சொல்வதை கேட்டுக்கொள்ளுங்கள். ஆனால், ஆண்டவர் இயேசு சொல்வதை மட்டுமே விசுவாசமாக எடுத்துக்கொள்ளுங்கள். நாம் சிறப்பானவர்கள், ஏனெனில் நம் படைப்பாளராம் ஆண்டவர் இயேசு சிறப்பானவர், ஆமென்.

Article by
MRS.MERCY THANGARAJ
Youth Fellowship

# MY IDENTITY IN JESUS

### BELOVED
"I have loved you with an everlasting love; I have drawn you with unfailing kindness." - Jeremiah 31:3

### A CHILD OF GOD
"See what great love the Father has lavished on us, that we should be called children of God! And that is what we are!" - 1 John 3:1

### DELIGHTED IN
"The Lord your God is with you, the Mighty Warrior who saves. He will take great delight in you; in his love he will no longer rebuke you, but will rejoice over you with singing." - Zephaniah 3:17

### FORGIVEN
"He himself bore our sins in his body on the cross, so that we might die to sins and live for righteousness; by his wounds you have been healed." - 1 Peter 2:24

### WASHED CLEAN
"Though your sins are like scarlet, they shall be as white as snow; though they are red as crimson, they shall be like wool." - Isaiah 1:18

### FREE
"It is for freedom that Christ has set us free. Stand firm, then, and do not let yourselves be burdened again by a yoke of slavery." - Galatians 5:1

### A TEMPLE OF THE HOLY SPIRIT
"Do you not know that your bodies are temples of the Holy Spirit, who is in you, whom you have received from God?" - 1 Corinthians 6:19

### ADOPTED INTO GOD'S FAMILY
"The Spirit you received brought about your adoption to sonship. And by him we cry, 'Abba, Father.'" - Romans 8:15

### CO-HEIR WITH CHRIST
"Now if we are children, then we are heirs — heirs of God and co-heirs with Christ." - Romans 8:17

### RIGHTEOUS
"For He made Him who knew no sin to be sin for us, that we might become the righteousness of God in Him." - 2 Corinthians 5:21

### NEW
"Therefore, if anyone is in Christ, he is a new creation: The old has gone, the new has come!" - 2 Corinthians 5:17

### A SAINT
"You were washed, you were sanctified, you were justified in the name of the Lord Jesus Christ and by the Spirit of our God." - 1 Corinthians 6:11

### SET APART
"You are a chosen race, a royal priesthood, a holy nation, a people for his own possession." - 1 Peter 2:9

### AN AMBASSADOR OF CHRIST
"We are therefore Christ's ambassadors, as though God were making his appeal through us." - 2 Corinthians 5:20

### A CO-LABORER
"For we are co-workers in God's service; you are God's field, God's building." - 1 Corinthians 3:9

### A SWEET AROMA
"For we are to God the pleasing aroma of Christ among those who are being saved and those who are perishing." - 2 Corinthians 2:15

### NEVER ALONE
"The Lord himself goes before you and will be with you; he will never leave you nor forsake you." - Deuteronomy 31:8

### A MASTERPIECE
"For we are God's masterpiece. He has created us anew in Christ Jesus, so we can do the good things he planned for us long ago." - Ephesians 2:10

### WONDERFULLY MADE
"I am fearfully and wonderfully made." - Psalm 139:14

### BOLD
"Since we have such a hope, we are very bold." - 2 Corinthians 3:12

### HAVING GUARANTEED VICTORY
"You have given me your shield of victory. Your right hand sustains me; you stoop down to make me great." - Psalm 18:35

### HOLDING A SECURED FUTURE
"'For I know the plans I have for you,' declares the Lord, 'plans to prosper you and not to harm you, plans to give you hope and a future.'" - Jeremiah 29:11

### WHOLE IN CHRIST
"In Christ you have been brought to fullness." - Colossians 2:10

# இயேசுவின் சீடன்

# தோமா



**தோமா:**

இயேசுவின் பன்னிரண்டு திருத்தூதர்களில் ஒருவர்.

**லாசரின் உயிர்த்தெழுதல் நிகழ்வு:**

- யூதேயாவின் பெத்தானியா செல்ல சீடர்கள் அஞ்சினர்.
- தோமா மட்டும் தைரியமாக “நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்” என்றார்.
- இதனால் சீடர்கள் லாசரின் உயிர்த்தெழுதலைக் கண்டார்கள்.

**சந்தேக தோமா:**

- இயேசுவின் உயிர்த்தெழுதலை முதலில் நம்பவில்லை.
- கைகள், விலா காயங்களைத் தொடிப் பார்க்க வேண்டும் என்றார்.
- இயேசு தோன்றி கைகளை காட்டியபோது, “நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!” என நம்பிக்கை வெளிப்படுத்தினார்.
- இதுவே அவருக்கு “சந்தேக தோமா” என்ற பெயரைக் கொடுத்தது.

**இந்தியாவிற்கு வந்த பணி:**

- கி.பி 52ல் கேரளக் கடற்கரையில் கிறிஸ்தவத்தைப் பிரசங்கித்தார்.
- தென் கேரளத்தில் ஏழு திருச்சபைகள் நிறுவினார்:
- மலியங்கர, பாலயூர், பாரூர், கோகமங்கலம், நிராணம், சாயல், கொல்லம்.
- இவற்றில் நான்கு திருச்சபைகள் இன்றும் நிலைத்து உள்ளன.

**வரலாற்று சான்றுகள்:**

- மார்கோ போலோ, நிக்கோலோடிகான்டி, கிரிகோரி (கி.பி 590) உட்பட பலர் எழுதியுள்ளனர்.
- அம்புரோஸ், நசனியன்சுஸ் கிரிகோரி, இப்ரிம், ஜெரோம் போன்ற அறிஞர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

**மரணம்:**

- தமிழ்நாட்டின் சென்னை சின்னமலையில் கி.பி 72ல் ஈட்டியால் குத்தப்பட்டு இரத்தசாட்சியாகினார்.
- அவரின் கல்லறையின் மீது சாந்தோம் ஆலயம் கட்டப்பட்டது.
- இதற்கு பேதுருவின் கல்லறை (வாடிகன்) ஆலயத்துக்கு இணையான முக்கியத்துவம் உண்டு.

**நாம் கற்றுகொள்ள வேண்டியது:**

- ஆபத்திலும் தைரியமாக இயேசுவோடு நிற்க வேண்டும்.
- சந்தேகம் தவறல்ல, ஆனால் அது இயேசுவின் வார்த்தைகளால் தெளிவுபெற வேண்டும்.
- இயேசுவைப் பின்பற்றும் பற்றுறுதி மிக அவசியம்.
- பைபிளின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து தூய்மையான வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதே தோமாவின் வாழ்க்கையின் அழைப்பு.

Article by

## MISS. AJINSHA

**DEDICATION DATE**

**28.09.25**
**SUNDAY**

**C.S.I.PUNEPALLI CHURCH, CHITTOOR**












## OUTREACH MINISTRY

Our Outreach Ministry is dedicated to reaching communities with the love and truth of Jesus Christ. Through house visits, prayer gatherings, Bible study, and personal care, we bring the Gospel to those who may never step into a church building.

We walk alongside people in their struggles, offering encouragement, hope, and the message of salvation. Whether under a palm tree or in a labor camp room, our mission remains the same: to see lives transformed by the power of God's Word and the presence of the Holy Spirit.

# OLD TESTAMENT IN CHRONOLOGICAL ORDER

GENESIS – CREATION, THE FALL, ADAM, EVE, ABRAHAM, ISAAC, JACOB, JOSEPH — NOAH'S ARK
– JOB – SUFFERING AND FAITHFULNESS

MOSES:
EXODUS – EXODUS FROM EGYPT, MOSES — PARTING RED SEA
LEVITICUS – THE LAW
NUMBERS – REBELLION IN THE WILDERNESS, BUILDING THE TABERNACLE
DEUTERONOMY – A CALL TO COVENANT FAITHFULNESS

JOSHUA – GOD'S BATTLE PLAN
JUDGES – ISRAEL'S FAILURE
– RUTH – GOD'S HAND IN THE BIG AND SMALL
I SAMUEL – ISRAEL'S FIRST KING — DAVID AND GOLIATH
2 SAMUEL – KING DAVID'S RULE
– PSALMS – BOOK OF POEMS AND SONGS
I AND 2 CHRONICLES – HISTORY OF ISRAEL
I AND 2 KINGS – REIGN OF KINGS — ISRAEL IS DIVIDED INTO NORTHERN AND SOUTHERN KINGDOMS
– PROVERBS – BOOK OF WISDOM
– ECCLESIASTES – THE MEANING OF LIFE
– SONG OF SONGS – A LOVE POEM
ISAIAH – JUDGEMENT AND PROPHECY — LOTS OF PROPHECIES ABOUT JESUS!
JEREMIAH – A MESSENGER FOR GOD'S JUDGEMENT AND GRACE
LAMENTATIONS – POETIC REFLECTION ON JERUSALEM

PROPHETS:
MICAH – COVENANT LOVE
HABAKKUK – HABAKKUK QUESTIONS GOD
ZEPHANIAH – BOOK OF WARNING AND JUDGEMENT
HOSEA – METAPHOR OF GOD'S LOVE
AMOS – A MESSAGE TO ISRAEL
JOEL – THE DAY OF THE LORD
OBADIAH – JUDGEMENT OF NATIONS
JONAH – REPENTANCE OF NINEVEH
EZEKIEL – GOD'S JUDGEMENT AND HOPE
DANIEL – TRAILS AND FAITHFULNESS
HAGGAI – REBUILDING THE TEMPLE
ZECHARIAH – VISIONS AND PROPHECIES
NAHUM – DOWNFALL OF NINEVEH
MALACHI – THE LAST BOOK

EZRA AND NEHEMIAH – REBUILDING JERUSALEM
– ESTHER – GOD SAVES HIS PEOPLE

## GENRES

- PENTATEUCH
- MINOR PROPHETS
- MAJOR PROPHETS
- WISDOM AND POETRY
- HISTORY

# SEPTEMBER Winners

## Cross Word

- Iniyal Evangeline
- Sherinsha

## Find the Way

- Shaana Liliya
- Iniyan Immanuel
- Hazel Hartlyn
- Jesil Bernice

## Kids Colouring

- Shaana Liliya
- Iniyan Immanuel
- Hazel Hartlyn
- Jesil Bernice

## Word Search

- Iniyal Evangeline
- Hazel Hartlyn
- Jesil Bernice

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.


**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**to Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Name: ____________________ Date: __________

Kids Coloring



# JESUS GIVES THANKS



Discover the hidden words.



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| L | B | L | R | T | R | U | S | T | B | C | J | X | Y | T |
| A | L | U | E | T | K | E | W | N | E | L | E | V | E | N |
| Z | O | R | J | A | Q | V | W | D | I | E | D | F | Q | A |
| A | E | Y | E | C | C | E | M | U | G | N | P | R | D | V |
| R | J | Z | C | K | T | N | G | Y | O | G | M | U | I | C |
| U | S | P | T | W | H | C | T | H | A | N | K | S | S | H |
| S | O | Q | E | I | G | W | K | C | D | B | S | M | C | I |
| F | M | L | D | A | W | O | C | B | W | I | Q | Z | I | L |
| P | A | S | P | R | B | I | D | Y | J | N | A | M | P | D |
| E | I | T | D | H | R | I | R | T | E | K | Z | I | L | R |
| X | L | Y | H | N | V | V | E | I | A | M | F | M | E | E |
| T | J | O | O | E | E | Q | O | M | O | B | V | I | S | N |
| G | N | W | T | Z | R | N | Z | U | P | U | U | X | S | N |
| E | T | D | E | M | W | N | M | O | E | A | W | W | H | H |
| J | E | S | U | S | W | N | P | F | I | B | R | E | A | D |

**Word Bank**

| | | |
|---|---|---|
| JESUS | CHILDREN | DIED |
| THANKS | LAZARUS | DISCIPLES |
| REJECTED | GOD | FISH |
| TRUST | FATHER | BREAD |


Name :

WORD SEARCH

FIND THE WAY

Name : ..............................................................


# JESUS GIVES THANKS



CROSS WORD

Name : ........................................................................

# Jonah Crossword



**Across**

4. Jonah lived inside the belly of a fish for this number of days.
5. This is the number of days the people of Nineveh had to change and repent.
6. The fish did this to Jonah to get rid of him.
8. This is the name of the city Jonah was to send a message to.
10. Jonah spent most of his time inside the fish doing this.

**Down**

1. Jonah was swallowed by a very large ____.
2. It's better to be ____ to God then not to listen and go your own way.
3. Jonah was called this because he gave messages from the Lord.
7. Instead of going to Nineveh Jonah ran away on this instead.
9. The water became ____ as soon as Jonah was thrown overboard.

# OCTOBER - 2025

| | |
|---|---|
| 01-OCTOBER | Mrs. John Gerald Sheeba Derick |
| 01-OCTOBER | Miss. H.JohannaJane |
| 01-OCTOBER | Ms. Angilin Remi Princy |
| 03-OCTOBER | Miss. SmyrnaSyntche |
| 03-OCTOBER | Mr. J. Stephen Chellaraj |
| 03-OCTOBER | Mrs. J. Blessy |
| 04-OCTOBER | Mr. Praveen Paul |
| 05-OCTOBER | Master. Immanuel Suthan |
| 05-OCTOBER | Ms. Nivina Chandrasekar |
| 07-OCTOBER | Mr. Sharvin John |
| 08-OCTOBER | Ms. Akila |
| 08-OCTOBER | Miss. Janet Zaharina |
| 09-OCTOBER | Ms. D.P. Mercy |
| 09-OCTOBER | Master. J. Jernus |
| 11-OCTOBER | Mr. Prabu Dinesh Kumar |
| 13-OCTOBER | Mrs. Anitha Geroge |
| 14-OCTOBER | Mrs. Godshilin |
| 15-OCTOBER | Mr.Jovin |
| 15-OCTOBER | Mr.Godson DanielRao |
| 17-OCTOBER | Mrs. Sahila Grace Justin |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

| | |
|---|---|
| 17-OCTOBER | Baby. ZyanMaverick Vijinraj |
| 18-OCTOBER | Mrs. Helen Hemabai |
| 20-OCTOBER | Ms. Aidean Joyphonse Derick |
| 20-OCTOBER | Mrs. Patricia Santhi |
| 20-OCTOBER | Baby. LeonRoy Samuel |
| 21-OCTOBER | Baby. Athithi Shamma |
| 21-OCTOBER | Mr. J.C. Jesho |
| 22-OCTOBER | Mrs. Sheeba Deva Prakash |
| 23-OCTOBER | Ms. B.N. Kariss Angelo |
| 23-OCTOBER | Mrs. Biblin Christabel |
| 24-OCTOBER | Mr. Justin Oliver |
| 24-OCTOBER | Miss.A. Jemimah |
| 27-OCTOBER | Mr. Jayan Dharmaraj |
| 29-OCTOBER | Miss. Abigail Christine |
| 29-OCTOBER | Mrs. Marylene Hana |
| 30-OCTOBER | Mr. Pavul Hensman |
| 11-OCTOBER | Mr. Ashok Jayakumar Hanly Paul |
| 12-OCTOBER | Master. Eion Jayden |
| 31-OCTOBER | Mr.. Joel Singh Edison |


"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."


"The Lord bless you and keep you; the Lord make his face shine on you and be gracious to you; the Lord turn his face toward you and give you peace."

# OCTOBER *Wedding* ANNIVERSARY

| | |
|---|---|
| **05-OCT** | Mr. Ravindra<br>&<br>Mrs. Sunitha Ravindra |
| **11-OCT** | Mr. Daniel Durai Singh<br>&<br>Mrs. Pamela Rachel Daniel |
| **21-OCT** | Mr. Prabu Dinesh Kumar<br>&<br>Mrs. Rebecca |

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14



"Celebrate the Festival of Harvest with the firstfruits of the crops you sow in your field. "Celebrate the Festival of Ingathering at the end of the year, when you gather in your crops from the field.
-Exodus 23:16

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# HARVEST FESTIVAL

## 08 NOVEMBER 2025

6 pm Onwards
Grand Stand Stadium Auditorium

## HIGHLIGHTS

Thanks Giving
Delicious Food Stalls
and more

Contact: +971 56 489 3587 Stanley (HF Convenor) +971 56 766 8348 Rev. Baktha Thiyagarajan




EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY